நாள்: 03.04.2021
நேரம்: மாலை 06.00

**கோயம்புத்தூர் மாவட்டம்**
**சட்டமன்ற பொதுத்தேர்தல் -2021-தினசரி விவரம்**
**I-தேர்தல் கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி நடக்க உள்ளது. அதனடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு மையம் கடந்த 01.03.2021 அன்று முதல் செயல்பட்டு வருகின்றது.

தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தை பொதுமக்கள் **1800 425 4757** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு **வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தல், தேர்தல் விதிமுறைகளை மீறி சுவரொட்டிகள் ஒட்டுதல், வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள் விநியோகித்தல், ஒரு சேர வாகன அணிவகுப்பு மேற்கொள்ளுதல், மது விநியோகித்தல்,** உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விதிமீறல் குறித்த புகார்கள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் புகார்களை தேர்தல் பறக்கும் படைக்கு தெரிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நேற்றுவரை(02.04.2021) பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | **214** |
| 2. | இன்று(03.04.2021) பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 30 |
| | **மொத்தம்** | **244** |

| | | |
|---|---|---|
| 1. | ஏற்றுக்கொள்ளப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 244 |
| 2. | தீர்வு காணப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 132 |
| 3. | நிராகரிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 103 |
| 4. | நிலுவையில் உள்ள புகார்களின் எண்ணிக்கை | 9 |

**II - சிவிஜில் செயலி (C –VIGIL APP)**

சட்டமன்ற தேர்தலிபோது தேர்தல் விதிமீறல்களை பொதுமக்கள் பார்த்தால் செல்போனில் படம் பிடித்து அதை சீ விஜில் என்ற செயலி மூலம் மாவட்ட தேர்தல்

கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பலாம். அதன்பேரில் பறக்கும் படையினர் அங்கு சென்று பெறப்பட்ட புகார் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் ஆதாரங்களுடன் புகார் தெரிவிக்க இந்த செயலியானது உருவாக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நேற்றுவரை (02.04.2021 4மணி வரை, நள்ளிரவு 12 மணி வரை ) (682+8=690)பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | **690** |
| 2. | இன்று(03.04.2021- 4மணி வரை) பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 14 |
| | **மொத்தம்** | **704** |

| | | |
|---|---|---|
| 1. | ஏற்றுக்கொள்ளப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 704 |
| 2. | தீர்வு காணப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 525 |
| 3. | நிராகரிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 177 |
| 4. | நிலுவையில் உள்ள புகார்களின் எண்ணிக்கை | 2 |

**<u>கட்டுப்பாட்டு அறை மின்னஞ்சல் புகார் விபரம்</u>**

சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 தொடர்பான தேர்தல் விதிமீறல்கள் குறித்த புகார்களை பொதுமக்கள் cbeelectioncontrolroom2021@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| 1. | இதுவரை (2.04.2021)பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | **2** |
| 2. | இன்று(03.04.2021) பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 2 |
| | **மொத்தம்** | **4** |

| | | |
|---|---|---|
| 1. | ஏற்றுக்கொள்ளப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 4 |
| 2. | தீர்வு காணப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 1 |
| 3. | நிராகரிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 2 |
| 4. | நிலுவையில் உள்ள புகார்களின் எண்ணிக்கை | 1 |



**Dt:03.04.2021**

## III - பறக்கும் படை

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேர்தல் செலவினங்களை கண்காணிக்க

- பறக்கும் படை கண்காணிப்பு குழுக்கள் (FST – Flying Squad Team)
- நிலையான கண்காணிப்புக்குழுக்கள் (Static Surveillance Team)ஆகிய குழுக்கள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் தலா 9 குழுக்கள், ஒவ்வொரு 8 மணி நேரத்திற்கும் மூன்று குழுக்களாக சுழற்சி முறையில் (6am to 2pm, 2pm-10pm, 10pm-6am) 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.

அதுபோலவே வீடியோ கண்காணிப்புக் குழு (Video Surveillance Team) - ஒரு தொகுதிக்கு இரண்டு குழுக்கள் வீதம் 12 மணி நேரம் செயல்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு குழுவில், துணை வட்டாட்சியர் நிலைக்கு குறையாத அலுவலர் தலைமையில், ஒரு சார்பு ஆய்வாளர், 2காவலர்கள், வீடியோ ஒளிப்பதிவாளர் பணியாற்றி வருகின்றனர்.

| பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம் மற்றும் இதர விவரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | இதுவரை (02.04.2021) | | | |
| | | ரொக்கம் (ரூபாயில்) | மதுப்பாட்டில்கள் மதிப்பீடு (ரூபாயில்) | இதரப் பொருட்கள் (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | 19,10,350 | 1,01,112 | 32,850 | 20,44,312 |
| 2. | 116-சூலூர் | 26,12,460 | 77,922 | - | 26,90,382 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | 17,42,950 | 1,24,206 | - | 18,67,156 |
| 4. | 118-கோவை வடக்கு | 91,51,340 | 32,940 | - | 91,84,280 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | 80,97,922 | 60,690 | 1,15,62,431 | 1,97,21,043 |
| 6. | 120-கோவை தெற்கு | 26,91,511 | 2.71,730 | 43,84,87,000 | 44,14,50,241 |
| 7. | 121-சிங்காநல்லூர் | 1,76,11,870 | 1.24,420 | 2,92,76,426 | 4,70,12,716 |
| 8. | 122-கிணத்துக்கடவு | 26,41,240 | 57,62,738 | - | 84,03,978 |
| 9. | 123-பொள்ளாச்சி | 69,71,230 | 54,362 | - | 70,25,592 |
| 10. | 24-வால்பாறை | 39,76,640 | 58,450 | - | 40,35,090 |
| | மொத்தம் | **5,74,07,513** | **66,68,570** | **47,93,58,707** | **54,34,34,790** |



**Dt:03.04.2021**

| பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கம் மற்றும் இதர விவரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | இன்று (03.04.2021) | | | |
| | | ரொக்கம் (ரூபாயில்) | மதுப்பாட்டில்கள் மதிப்பீடு (ரூபாயில்) | இதரப் பொருட்கள் (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | - | 3,780 | - | 3,780 |
| 2. | 116-சூலூர் | - | 4,848 | - | 4,848 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | - | 2,064 | - | 2,064 |
| 4. | 118-கோவை வடக்கு | - | 5,200 | - | 5,200 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | - | 2,500 | - | 2,500 |
| 6. | 120-கோவை தெற்கு | 98,00,085 | - | - | 98,00,085 |
| 7. | 121-சிங்காநல்லூர் | 60,000 | 2,400 | - | 62,400 |
| 8. | 122-கிணத்துக்கடவு | - | 6,024 | - | 6,024 |
| 9. | 123-பொள்ளாச்சி | - | 17,160 | - | 17,160 |
| 10. | 124-வால்பாறை | 1,80,000 | 18,060 | - | 1,98,060 |
| | மொத்தம் | 1,00,40,085 | 62,036 | - | 1,01,02,121 |

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் இதுவரை:

- ✓ **ரூ.6,74,47,598 ரொக்கம் பணம்,**
- ✓ **ரூ.67,30,606 இலட்சம் மதிப்பில் மதுப்பாட்டில்கள்,**
- ✓ **ரூ.47,93,58,707 மதிப்பில் இதரப்பொருட்கள்**
- ✓ **என மொத்தம் ரூ.55.35கோடி மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

மேற்கண்டவாறு கைப்பற்றப்படும் தொகை மற்றும் இதரப் பொருட்களுக்கு உரிய ஆவணங்களை சம்மந்தப்பட்டவர்கள் சமர்ப்பித்தபின் மாவட்ட கண்காணிப்புகுழுவின் பரிந்துரையின்படி விடுவிக்கப்படும். மாவட்டம் முழுவதும் அனைத்துப் பகுதிகளிலும், கண்காணிப்பு குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.



**Dt:03.04.2021**

## IV - வாக்காளர் விழிப்புணர்வு

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2021 முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவு இலக்கினை அடைய மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் சார்பில் கையெழுத்து இயக்கம், வாக்காளர் விழிப்புணர்வு குறும்படம் திரையிடுதல், துண்டு பிரசுரம் விநியோகம் செய்தல், மாவட்டத்தின் முக்கியப்பகுதிகளில் இராட்சத பலூன்கள் பறக்க விடுதல், சைக்கிள் விழிப்புணர்வு பேரணி போன்ற பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மூலமாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

| சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021<br>03.04.2021 தேதி நடைபெற்ற விழிப்புணர்வு விவரம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | விழிப்புணர்வு நடைபெறும் இடம் | விழிப்புணர்வு விபரம் |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | காரமடை | அண்ணா நகர் பகுதியில் வாக்காளர் பெருமக்களுக்கு தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் 100% வாக்குப்பதிவு ஆகியவற்றினை விளக்கும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. |
| 2. | 119-தொண்டாமுத்தூர் | தொண்டாமுத்தூர் | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு செய்வது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. |
| 3. | 124-வால்பாறை | பொங்காலியூர் | வாக்காளர் பெருமக்களுக்கு தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் 100% வாக்குப்பதிவு ஆகியவற்றினை விளக்கும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. |

## V-தபால் வாக்குப்பதிவு

இந்தியத் தேர்தல் ஆணையம், கொரோனா வைரஸ் தொற்றினைக் கருத்தில் கொண்டு, 80வயதிற்கும் மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள், ஆகியோர் தபால் வாக்குப்பதிவிற்கு அனுமதி அளித்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிக்குட்ட பகுதிகளில், **80 வயதிற்கும் மேற்பட்டவர்கள் 7,249 நபர்கள், மாற்றுத்திறனாளிகள் 605 நபர்கள்,** என மொத்தம் **7854** நபர்கள் தபால் வாக்குப்பதிவு மூலம் வாக்குப்பதிவு செய்ய விருப்பம் தெரிவித்திருந்தனர்.

அதனடிப்படையில் இதுவரை **80 வயதிற்கும் மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள்** என மொத்தம் **7329** தபால் வாக்குபதிவு செய்துள்ளனர்.

**சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021**
**தபால் வாக்குபதிவாளர்கள் விவரம்**

| வ.எண் | சட்டமன்ற தொகுதி | இதுவரை வாக்களித்த 80 வயதிற்கு மேற்ப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | இதுவரை வாக்களித்த மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் எண்ணிக்கை | மொத்த தபால் ஓட்டுக்கள் |
|---|---|---|---|---|
| 1. | 111-மேட்டுப்பாளையம் | 510 | 138 | 648 |
| 2. | 116-சூலூர் | 708 | 51 | 759 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | 688 | 63 | 751 |
| 4. | 118-கோவை வடக்கு | 596 | 19 | 615 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | 974 | 86 | 1060 |
| 6. | 120-கோவை தெற்கு | 733 | 36 | 769 |
| 7. | 121-சிங்காநல்லூர் | 807 | 25 | 832 |
| 8. | 122-கிணத்துக்கடவு | 502 | 21 | 523 |
| 9. | 123-பொள்ளாச்சி | 699 | 75 | 774 |
| 10. | 124-வால்பாறை | 539 | 59 | 598 |
| | மொத்தம் | 6756 | 573 | 7329 |



**Dt:03.04.2021**

சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்ட குழுக்கள் மூலம் தபால் வாக்குச்சீட்டுகள் அவர்கள் குடியிருப்புகளிலேயே நேரடியாக வழங்கி வாக்குப்பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## காவல்துறையினர் - தபால் வாக்குபதிவு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மாநகர மற்றும் ஊரக காவல் துறையினருக்கு தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் -2021யை முன்னிட்டு (02.04.2021) அன்று சிறப்பு வாக்குப்பதிவு மையங்களில் தபால் வாக்குகளை பதிவு செய்திட வாக்குப் பதிவு மையம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

| சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021<br>மாநகர மற்றும் ஊரக காவல்துறையினர்<br>தபால் வாக்குபதிவு விவரம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | வாக்குச்சீட்டு வழங்கப்பட்ட விபரம் | பதிவான வாக்குகளின் விபரம் |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | 324 | 237 |
| 2. | 116-சூலூர் | 155 | 155 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | 407 | 278 |
| 4. | 118-கோவை வடக்கு | 324 | 182 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | 267 | 183 |
| 6. | 120-கோவை தெற்கு | 672 | 559 |
| 7. | 121-சிங்காநல்லூர் | 247 | 247 |
| 8. | 122-கிணத்துக்கடவு | 251 | 251 |
| 9. | 123-பொள்ளாச்சி | 197 | 151 |
| 10. | 124-வால்பாறை | 109 | 109 |
| | மொத்தம் | **2953** | **2352** |

அதனடிப்படையில், இதுவரை மாநகர மற்றும் ஊரக காவல் துறையினர் மொத்தம் **2352 (79.65%) தபால்** வாக்குப்பதிவு செய்துள்ளனர்.



**Dt:03.04.2021**

## VI-மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம்

கோயம்புத்தூர் மாவட்ட சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவினை சரிபார்க்கும் இயந்திரங்கள் (EVM & VVPAT) அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிகள் முன்னிலையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலம் சுழற்சி முறை (Randomization)-யில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

| சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | பாதுகாப்பு அறைகள் | வாக்குச் சாவடிகள் | மின்னனு வாக்குபதிவு இயந்திரகள் | வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரங்கள் |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | நஞ்சை லிங்கம்மாள் தொழில்நுட்ப கல்லூரி | 413 | 496 | 550 |
| 2. | 116-சூலூர் | சமூக நல பாதுகாப்பு மைய கட்டிடம் | 463 | 556 | 616 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | அரசு மகளில் பல்வகை தொழில்நுட்ப கல்லூரி | 676 | 812 | 900 |
| 4. | 118-கோவை வடக்கு | சித்தாபுதூர் மாநகராட்சி உயர் நிலைப்பள்ளி | 499 | 599 | 664 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | பேரூர் வட்டாட்சியர் அலுவலகம் | 471 | 566 | 627 |
| 6. | 120-கோவை தெற்கு | மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ராம்நகர் | 359 | 431 | 478 |
| 7. | 121-சிங்காநல்லூர் | பெர்க்ஸ் மெட்ரிக்குலேசன் பளளீ உப்பிலிபாளையம் | 449 | 539 | 598 |
| 8. | 122-கிணத்துக்கடவு | மலையன் மெட்ரிக் உயர்நிலை பள்ளி மதுக்கரை | 485 | 582 | 646 |
| 9. | 123-பொள்ளாச்சி, | நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி | 318 | 382 | 423 |
| 10. | 124-வால்பாறை | நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி | 294 | 353 | 392 |
| | | | **4427** | **5316** | **5894** |



**Dt:03.04.2021**

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 4427 வாக்குப்பதிவு மையங்களுக்கு 5316 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (**Control Unit and Ballot Unit**), 5894 வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரங்களும் (VVPAT) அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு,** காப்பு அறையில் (STRONG ROOM) உரிய கண்காணிப்பு கேமரா மற்றும் காவல்துறை பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது.

118-கோவை வடக்கு, 120-கோவை தெற்கு மற்றும் 121-சிங்காநல்லூர் ஆகிய தொகுதிகளில் வேட்பாளர்களின் எண்ணிக்கை 16-க்கும் மேற்பட்டு இருப்பதன் காரணமாக இம்மூன்று தொகுதிகளுக்கும் கூடுதல் ஒதுக்கீடாக 1569 **வாக்குப்பதிவு இயந்திரங்கள் (**Ballot Unit**) ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.**

## VII-வாக்குப்பதிவு மையம்

இந்திய தேர்தல் ஆணையம் வகுத்துள்ள விதிகளின்படி கோயம்புத்தூர் மாவட்டத்தில் வாக்குசாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கொரோனா வைரஸ் தொற்றினைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1050க்கு அதிகமாக வாக்காளர்கள் வாக்குச்சாவடிகளை இரண்டாக பிரித்து கூடுதலாக துணை வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

| சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 வாக்குப் பதிவு மையங்கள் மற்றும் வாக்குச்சாவடிகள் விவரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ.எண்** | **சட்டமன்ற தொகுதி** | **வாக்குச் சாவடிகள்** | **வாக்குச் சாவடி மையம்** | **பதட்டமான வாக்குச் சாவடி** | **பதட்டமான வாக்குச் சாவடி மையம்** |
| 1. | **111-மேட்டுப்பாளையம்** | 413 | 141 | 51 | 17 |
| 2. | **116-சூலூர்** | 463 | 130 | 52 | 11 |
| 3. | **117-கவுண்டம்பாளையம்** | 676 | 135 | 153 | 26 |
| 4. | **118-கோவை வடக்கு** | 499 | 78 | 153 | 20 |
| 5. | **119-தொண்டாமுத்தூர்** | 471 | 92 | 137 | 19 |
| 6. | **120-கோவை தெற்கு** | 359 | 59 | 125 | 17 |
| 7. | **121-சிங்காநல்லூர்** | 449 | 72 | 91 | 14 |
| 8. | **122-கிணத்துக்கடவு** | 485 | 123 | 59 | 9 |
| 9. | **123-பொள்ளாச்சி,** | 318 | 131 | 28 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | 124-வால்பாறை | 294 | 124 | 12 | 7 |
| மொத்தம் | | 4427 | 1085 | 861 | 146 |

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4427 வாக்குச்சாவடிகள் உள்ளன. அனைத்து வாக்காளர்களும் எவ்வித சிரமமின்றி வந்து வாக்களிக்கும் விதமாக வாக்குச்சாவடிகளில் குடிநீர், மின்சாரம் மற்றும் கழிப்பறை உள்ளிட்ட அனைத்து விதமான அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும், சாமியானா அல்லது தற்காலிக பந்தல் அமைக்கப்படவுள்ளது.

மேலும், முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிமையாக வாக்குப்பதிவில் பங்கேற்க்கும் விதமாக அனைத்து வக்குச்சாவடிகளிலும் சாய்வு தளம் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து வாக்குப்பதிவு மையங்களுக்கும் மாவட்ட தேர்தல் அலுவலர் மூலமாக சக்கர நாற்காலிகள் பெறப்பட்டு, மாற்றுத்திறனாளி நல அலுவலர் மூலம் வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## VIII - கொரோனா தடுப்பு உபகாரணங்கள்

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டி பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக 1050 வாக்காளர்களுக்கும் அதிகமாக உள்ள வாக்குச் சாவடிகள் இரண்டாக பிரிக்கப்பட்டு புதிதாக துணை வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கொரோனா பாதுகாப்பு முழு கவச உடைகள், வாக்களிக்க வரும் அனைத்து வாக்காளர்களுக்கும் கையுறைகள், சானிடைசர், முகக்கவசம், தெர்மல் ஸ்கேனிங் ஆகிய உபகாரணங்கள் அனைத்தும் இராமநாதபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது.

மேலும், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மூலமாக ஒவ்வொரு வாக்குச்சாவடிகளுக்கு கொரோனா தொற்று பரவல் தடுப்பு உபகாரணங்கள் பிரித்து சுகாதாரத்துறை அலுவலகம் வாயிலாக அனுப்பும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

## IX - வாக்கு எண்ணும் மையம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கோவை வடக்கு, கோவை தெற்கு, தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர் கவுண்டம்பாளையம், சூலூர், மேட்டுப்பாளையம், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை, ஆகிய 10 சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகளை எண்ணும் மையமாக **கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்ப கல்லூரி** ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சட்டப்பேரவை பொதுத் தேர்தலின் போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் வரையில் இவ்வளாகத்திலேயே அமைக்கப்படும் பாதுகாப்பு அறைகளிலேயே (Strong Room) வைத்து பாதுகாக்கப்பட உள்ளதால் காப்பு அறைகளில் (Strong Room) தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி தேவையான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட உள்ளது. மேலும், காவல்துறை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு கண்காணிக்கப்பட உள்ளது. வாக்கு எண்ணிக்கையின் போது வேட்பாளர்களின் முகவர்கள் உரிய வழியில் சென்று வர ஏதுவாக தடுப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது.

## X - அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பிரச்சாரத்தின் போது கொரோனா தடுப்பு செயல்கள்

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, அரசியல் கட்சியினருக்கான தேர்தல் நன்னடத்தை விதிகள் தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கபட்டுள்ளது. அதனை அனைத்து அரசியல் கட்சியினரும் முறையாக பின்பற்றவேண்டும்.

தற்போது, கொரோனா பரவலை தடுக்கும் வகையில், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பொது இடங்களில் பிரச்சாரம் செய்யும் போது, முகக்கவசம் அணிய வேண்டும். மேலும், பொது கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். பொதுக்கூட்டங்களில் பங்கேற்ப்பாளர்கள் அனைவருக்கும் தெர்மல் ஸ்கினிங் செய்யவேண்டும்.

எந்த அரசியல் கட்சியும் அல்லது வேட்பாளரும் சாதி இனம், மதம், மொழி ஆகியவற்றிற்கிடையில் வெறுப்பையும், ஆவேசத்தையும் தூண்டுகிற அல்லது அதிகப்படுத்துகிற செயலில் ஈடுபடக் கூடாது. கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டு இடங்களை தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்தக்கூடாது.

வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பது, வாக்காளர்களை உணர்வுப்பூர்வமாக தூண்டிவிடுவது, வாக்குச்சாவடியில் இருந்து 100 மீட்டர் தூரத்திற்குள் வாக்கு சேகரிப்பது, வாக்குப்பதிவுக்கு முந்தைய 48 மணி நேரங்களுக்குள் பொதுக்கூட்டம் நடத்துவது, வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை செய்வது போன்ற நடவடிக்கைகளை கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தவிர்க்க வேண்டும்.

அரசியல் கட்சி வேட்பாளர்கள் தாங்கள் நடத்த உத்தேசித்துள்ள கூட்டங்களின் மற்றும் ஊர்வலங்களின் நாள், நேரம் ஆகிய விபரங்களை முன்கூட்டியே தெரிவித்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உரிய அனுமதி பெற வேண்டும். வாக்காளர்கள் தவிர தேர்தல் ஆணையத்தால் உரிய அனுமதி பெறாதவர் எவரும் வாக்கு சாவடிக்குள் செல்ல கூடாது. தேர்தல் நடைமுறைகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் வேட்பாளர்கள் அவர்களது முகவர்கள் தேர்தல் அலுவலரிடம் புகார் செய்யலாம்.

அனைத்து தேர்தல் நடத்தை விதிமுறைகளையும் முழுமையாக கடைபிடிப்பதோடு, வாக்குப்பதிவு நாள் அன்று எல்லா அரசியல் கட்சியனரும், வேட்பாளர்களும் தேர்தல் அலுவலர்களுடன் ஒத்துழைத்து அமைதியாகவும், நல்ல முறையிலும் தேர்தலை நடத்தி முடிக்கவும் வாக்காளர்களுக்கு எந்த தடையும் இல்லாமல் வாக்களிக்கவும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.



**Dt:03.04.2021**